# சிந்திப்போம் செயல்படுவோம்

அன்புள்ள தோழர் பட்டாபி,

வணக்கம். வேலைநிறுத்த தயாரிப்பு குறித்த தங்களின் குறிப்பு இன்றைய காலத்தின் தேவை.

நிறுவனத்தின் சரிந்து வரும் நிலையை தடுத்து நிறுத்த, ஊழியர் நலன்களைக் காத்திட ஒரு வேலை நிறுத்தம் தேவை என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. பிரச்னை அது ஒரு நாள் போராட்டமா? காலவரையற்ற போராட்டமா? என்பது தான்.

அரசையும் நிர்வாகத்தையும் நிர்பந்தித்து, பேச்சு வார்த்தை நடத்தி, உடன்பாடு கண்டிட ஒரு போராட்டம் அதுவும் வேலைநிறுத்த வடிவில் தேவை என்பது இன்றைய நிலை.

ஒரு நாள் வேலை நிறுத்தம் என்ற தோழர் நம்பூதிரியின் நிலைபாட்டை ஏற்றுக் கொண்டால் வேலை நிறுத்ததிற்கான காரணம் குறித்து தொழிலாளர்களிடம் என்ன சொல்லப் போகிறோம்? அதுவும் முக்கியமான கோரிக்கையான விருப்ப ஓய்வு கூடாது என்பதில் ஊழியர் மத்தியில் நேர் எதிரான உணர்வு உள்ள போது. ஒரு நாள் வேலை நிறுத்தத்தின் தாக்கம் ஊழியர் மீதும், அரசு மற்றும் நிர்வாகத்தின் மீதும் என்ன விளைவுகளை ஏற்படுத்தும்? வெறும் அடையாள பூர்வமான போராட்டத்தில் ஊழியர்கள் எவ்வளவு ஈர்க்கப்படுவார்கள் என்பது ஐயப்பாட்டிற்குறியது. அரசு அல்லது நிர்வாகம் இறங்கி வந்து பேச்சு வார்த்தை நடத்தி உடன்பாடு கண்டிடும் என எப்படி நம்புகிறோம்? ஒருவேளை போராட்டம் சிறப்பாக நடந்தால் அதுவே அடுத்த கட்ட போராட்டத்திற்கு அடித்தளமாக அமையும். ஆனால் எதிர்பார்த்தபடி இல்லாமல் போனால் அடுத்த கட்ட போராட்டம் பற்றி சிந்திப்பதே சிரமமானதாகப் போய்விடும்.

நில், கவனி, செல் என்பது சரியானதுதான். ஆனால் அது பயணம் துவங்கிய பிறகுதான். ஆனால் இங்கு பயணத்தை துவக்குவது குறித்தே கருத்து வேறுபாடு என்றால் பயணம் எப்படி துவங்கும்?

அரசை நிர்பந்தித்து, கொள்கை நிலையினை மாற்றிட ஒரு போராட்டம் தேவை. தொழில்நுட்பம் ஏகமாக வளர்ந்து விட்ட சூழலில் ஊழியர் / அதிகாரிகளின் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் அதுவும் முழுமையான ஒற்றுமையில்லாத சூழலில் தொழிலை முடக்குமா? அரசின் கவனத்தை ஈர்க்கவோ, ஊழியர்களுக்கு நம்பிக்கை அளிக்கவோ பயன்படுமா?

தபால்-தந்தி-தொலைபேசி தொழிலாளர் இயக்கம் பல போராட்டங்களை சந்தித்துள்ளது. போராடி அரசின் கொள்கை நிலைகளை மாற்றியுள்ளது. எனவே பாரம்பரியம் மிக்க தொலைத் தொடர்பு ஊழியர் சங்கங்கள் பரந்துபட்ட ஒற்றுமையைக் கட்டி வலிமையான போராட்டத்திற்கு திட்டமிடுவது நல்லது. கால அவகாசம் உள்ளது. சிந்தித்து செயல்பட வேண்டுகிறோம்.

மாலி, ஈரோடு.